# ‘4 மாதங்களில் 700 பேர் கொலை’


விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 29 ரபி - ஆகி 21 இதழ் 330
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 13–1–85


## சென்னையில் கூட்டணித் தலைவர் ‘சிவா’

(சென்னை)

‘‘யாழ். மாநகரம் ஒரு சிறைச்சாலையாகியுள்ளது. அரசாங்கத்தின் அனுமதியுடனேயே சைக்கிள்களும் ஓடவேண்டும். கடந்த 4 மாத காலங்களில் 700-க்கும் அதிகமான தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள் ஏழு கிராமங்களிலிருந்து 20.000க்குமதிகமானவர்கள் அகதிகளாகியுள்ளனர்’’ என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் சென்னையில் தெரிவித்தார்.

திரு. சிவசிதம்பரம் சென்னையில் பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே மேற்குறிப்பிட்ட விபரங்களை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது;

‘‘இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தன, அந்த நாட்டின் பிரஜைகளைக் காப்பாற்றமுடியாதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்’

‘‘படுகொலைகள் தமிழ்ப்பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. தெற்கில் காலி என்ற இடத்திலுள்ள ‘பூஸா’ முகாமில் 800 தமிழர்

[4ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## வண.பிதாபஸ்தியன் தாயார் அமெரிக்க அரசிடம் விடுத்த உருக்கமான வேண்டுகோள்!

[நியூயோர்க்]

வங்காலையில் சுட்டுக்கொல்லப்பட்ட அருட்திரு. மேரி பஸ்தியனின் சடலத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்காவிலுள்ள அவரது தாயார் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அமெரிக்க அரசின் உதவி அமைச்சர் திரு. எலியட் ஏபிரகாமிடம் இந்தவேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்

படுகொலைசெய்யப்பட்ட வணபிதா மேரி பஸ்தியனின் சகோதரர்களுடன் வசித்துவரும் அவரது தாயாரான திருமதி என். வி. மனுவேல்பிள்ளை, அமைச்சருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் படுகொலை செய்யப்பட்ட தமது மகனின் சட

(4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

# ராணுவ ரீதியில் தீர்வுகாணவே இலங்கை அரசு விரும்புகிறது!

## இந்தியாதான்உதவவேண்டும்

### பார்த்தசாரதியைச் சந்தித்த கூட்டணித் தலைவர்கள் கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்னைக்கு ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு ஏற்படுத்துவதற்கே இலங்கை அரசாங்கம் விரும்புகிறது என்று இந்திய வெளியுறவு கொள்கைவகுக்கும் கமிட்டித்தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் எடுத்துக்கூறியுள்ளனர்.

இந்திய அரசாங்கம்தான் இனி இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு உதவவேண்டும் என்றும் கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், திரு. ஆர். மு. சிவசிவசிதம்பரம், செய சப்பந்தன் ஆகியோரடங்கிய ளொளர்நாயகம் திரு. அ. குழு நேற்று மாலை திரு. ஜி. பார்த்தசாரதியைச் சந்தித்து நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

கடந்த 18 மாதகாலமாக பேச்சுவார்த்தை நடத்

(4-ம்பக்கம் 4-ம் கலம் பார்க்க)

## ‘‘இலங்கை அரசு தனது திட்டப்படியே தீர்வுகாண விரும்புகிறது’’

### சென்னையில் தொண்டமான் கருத்து

(சென்னை)

‘‘இலங்கையின் இனப் பிரச்னைக்கு இலங்கை அரசாங்கம் தமது திட்டப்படியே தீர்வு காணவிரும்புகிறது இத்

(4-ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

## தந்திக் கம்பத்தில் பெண்ணின் சடலம்!

[யாழ்ப்பாணம்]

சுமார் 40 வயதுள்ள பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் தந்திக் கம்பம் ஒன்றில் கட்டிவைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுக் காலை தட்டாதெருச் சந்தியில் தலைவிரி கோலத்தில் கைகள் இரண்டும் தந்திக் கம்பத்துடன் பின்பக்கமாகக் கட்டப்பட்டு இறந்த நிலையில் அப்பெண் காணப்பட்டார்.

இச்சடலத்திற்குப் பக்கத்தில் தொங்கவிடப்பட்டிருந்த அட்டையில், ‘‘போராளிகளைக்

(4-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

ஆசிரியர் பதவி நேர் முகப் பரீட்சை:

## இவர்களுக்கு மேலும் அவகாசம்!

### சகலருக்கும் நியமனமாம்

[கொழும்பு]

அண்மையில் நடைபெற்ற ஆசிரியப் பதவிக்கான நேர் முகப் பரீட்சையில் தோற்றுதவர்கள் இம்மாதம் 21ம் திகதி காலை 9 மணிக்கு கல்வி அமைச்சிலுள்ள கல்விச் சேவைக் குழு

[4-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

★ பயங்கரவாத நடவடிக்கைகளைக் கையாள

## ஜனாதிபதி தலைமையில் விசேட பந்தோபஸ்து சபை!

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான விடயங்களைக் கையாளுவதற்கென விசேட

(4ம் பககம் 5ம்கலம் பார்க்க)

ஆயுதம் கொண்டு கலகம் - பாஸ்போட் விதிகளை மீறியமை

## ‘இலங்கை கடற்படையினர் ராணுவசட்டத்தில் விசாரணை

[மதுரை]

இராமேஸ்வரம் கடற் பகுதியில் இந்திய கடலோரக் காவல் படையினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட இலங்கைக் கடற்படை ரோந்துப் படகில் இருந்த காப்டனும் மற்றும் ஆறு கடற்படை வீரர்களும் இந்திய இராணுவச் சட்டத்தின கீழ் விசாரிக்கப்படுவார்கள் என்று மதுரை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஏழு பேரும் நேற்றுக் காலை பலத்த பாதுகாப்புடன் ராமேஸ்வரத்திலிருந்து மதுரைக்குக் கொண்டுவரப்பட்ட

(4-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க)

## தைப்பொங்கலுக்குப் பின்னர் பூஸாவிலுள்ள பல இளைஞர் விடுவிக்கப்படுவார்கள்!

### பிரஜைகள் குழுவிடம் லலித் உறுதி

[கொழும்பு]

தைப்பொங்கல் தினத்திற்குப் பின்னர் காலி பூஸாவிலுள்ள தமிழ் இளைஞர்களில் பெரும்பாலோனர் விடுதலை

(4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் மெம்மோறியல் பாடசாலை ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வரத்தினம் செல்வராசா, 1-ம் குறுக்குத் தெரு, இணுவில் றேட், மானிப்பாய். 1338

பத்தடி அகலம் பன்னிரண்டடி நீளமான, பாவிக்காத உயர்ந்த ரக பெல்சியம் கம்பளம் ஒன்று விற்பனைக்குண்டு-தொடர்பு திருமதி விஜயராணி பத்மராசா, 11/1 முதல் ஒழுங்கை, ஈச்ச மோட்டை, யாழ்ப்பாணம். 1286

யாழ். இந்து, இந்து மகளிர் கல்லூரிகளுக்கு அருகாமையில் நன்னீர்க் கிணற்றுடன் 3 படுக்கை அறைகளைக்கொண்ட வீடு விற்பனைக்குண்டு. ஸ்ரான்லி ஹவுஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:- 22135. 1266

பாவித்த வீட்டுத்தளபாடங்கள்விற்பனைக்கு உண்டு 50, 3ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 1351

அழுத்தமான ஆட்டுக்கல் அம்மி - கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது. தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா அல்லது சாவகச்சேரியில் சுல்த்தான் அப்துல்காதர் சகோதரர்கள் அல்லது கண்டி வீதி, கிளிநொச்சி. 1314

முல்லைத்தீவு, சிலாவத்தை கிராமத்தில் 10 ஏக்கர் தோட்டக்காணி (7 ஏக்கர் தென்னங்காணி, 3 ஏக்கர் தோட்டச் செய்கைக்கு) கிணறு வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. குகதாசன் ஆஸ்பத்திரி வீதி, முல்லைத்தீவு. 1311

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் அமைதியான சூழ்நிலையில் வீடும், இன்னொரு வீடு கட்டக்கூடிய காணியும் விற்பனைக்குண்டு. காலை 8 மணிக்கும் 10 மணிக்குமிடையில் தொடர்பு கொள்ளவும் க. முத்துக்குமாரு 45 அன்னசத்திர ஒழுங்கை, (3ம் ஒழுங்கை) பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1347

சித்தங்கேணில் 4 பரப்பு காணியில்எல்லா வசதியுமுள்ள 3 அறைவீடு விற்பனைக்குண்டு யாழ்ப்பாண நகர எல்லைக்குள் நிலத்திற்கு மாற்றமும் விரும்பத்தக்கது. தொடர்பு: ச. குலசிங்கம் ராகுல சித்தங்கேணி. 1355

## வகுப்புக்கள்

15 வருடங்களுக்கு மேல் G. C E O/L பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுபவமுள்ள (London-Inter-Qualified) ஆங்கில ஆசிரியை G. C. E. O/L 16-1-85 Spoken English - 19-1-85 வகுப்புக்கள் தொடங்குகிறுர் முகவரி: திருமதி இராஜரட்ணம், 251 பருத்தித்துறைவீதி, சங்கிலி தோப்பு, நல்லூர். 1354

G. A. Q, B. A., A/L வகுப்புகள் ஆரம்பம் 16-1-85. தொடர்புகளுக்கு: S. அருள் நங்கைJaffna Education Centre சாந்தி சினிமா அருகாமை யாழ்ப்பாணம். 1349

## FOR SALE

Teak Drawing -room suite, Dining table with Chairs, show case, Cup-board, Small Writing Table, Bed, 12 2 cuft Double - door automatic defrosting Kelvinator Refrigerator, dinner and cutlery sets for Sale S. K. Mathiaparaman 363, Navalar Road, Nallur, Jaffna. 1348


T.C.C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
றெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
றெருசோ நிலம் அமைத்துக்கொடுக்கப்படும்
த றெருசோ கொ.ஏருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்

64, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சட்டநாதர் சிவன்கோவில் அண்மை

தலைமை அலுவலகம்:- 69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


## கேள்வி அறிவித்தல்

அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தால், இயக்கச்சியில் அமைந்திருக்கும் அகதிகள் குடியேற்றத் திட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் கீழ் காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

1. 15 அடிவிட்டமுள்ள கிணறு அமைத்தல். 08 கிணறு.
2. 12 அடி அகலமுள்ள வீதிகள் களிமண்/கிரவல் மூலம் அமைத்தல்.
3. நிரந்தர பொதுசன கூடம் அமைத்தல். 600 ச. அடி.

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான விபரங்களையும் படங்களையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும் எல்லா வேலைகளுக்குமான கேள்விப்பத்திரங்களும்
ஜனவரி மாதம் 31-ந் திகதிக்கு முன்பு
பதிவுத்தபால் மூலம்
"அகதிகள் புனர்வாழ்வு நிதியம்",
வை. எம். சி. ஏ. கட்டிடம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(1284)

## வாடகைக்கு

மின்சாரம், தண்ணீர்வசதியுடன் மூன்று அறைகள் கொண்ட வீடு கொக்குவில் கிழக்கில் வாடகைக்கு உண்டு. சோ. சிவபாதசுந்தரம், 50, கோணமலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. 1322

உரும்பிராயில் சகல வசதிகளுடன், பாதுகாப்பு, நல்ல சுற்றுடல், 3 படுக்கை அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாடகை 500/- ரூபா வரை. விபரங்கட்கு:சிவநேசன் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு. 1267

திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் பல்கலைக்கழக மாணவிகள் தங்கக்கூடிய சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: இல. 30, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். அல்லது ஹான் ரெக்ஸ்ரையில் திருநெல்வேலி. 1313

அவசரதேவைகளுக்கு கொழும்பிற்கு வருபவர்களுக்கு தங்கும் வசதிகள் (சாப்பாட்டுடன்) செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 41/2 W. A. Silva Mawatte Wellawatte. 1358

## தேவை

பள்ளிமுனை, சென்ற் செபஸ்தியன் வீதி, தண்ணீர்தொட்டி கோபுரச் சுற்றுடலில் நவீன வசதிகளுடன் (உணவு அல்லது உணவின்றி) கௌரவமான பொறியியலாளர் (Engineer) க்கு தங்குமிடம் உடனடியாக தேவை. 16-1-85க்குப்பின் தொடர்பு கொள்ளவும். சுப்பிரமணியம் பில்டிங்ஸ் அலுவலகம் பள்ளி முனை. 1357

மினிபஸ் பங்குக்கு அல்லது வாடகைக்கு ஓட விரும்புபவர் ரூபா 50,000/- இருப்பின் தொடர்பு கொள்ளவும் ச. குலசிங்கம் வேலைப்பகுதி மாநகரசபை யாழ்ப்பாணம். 1356

7 வருடங்களாக வெளிநாட்டில் தொழில் புரியும், செவ்வாய்க்குற்றம் இல்லாத வண்ணார் இனத்தைச் சேர்ந்த 36 வயதுடையவருக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. உடனடியாக வெளிநாடு செல்லக்கூடியவராகவும், சுமாரன அழகு, கல்வி உடையவராகவும் இருக்க வேண்டும். சாதகக்குறிப்பு, புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். கண்ணியமாகப் பேணப்படும். விளம்பர இல. 1331, C/o ஈழநாடு. 1331

ஊர்காவற்றுறை
ப, நோ, கூ, சங்கம்
### கேள்விப்பத்திரம்

இரண்டாயிரத்தி நூற்றி முப்பது [2130) வெற்றுச்சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூ. 2/50 செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொண்ட பத்திரத்தில் "பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை" என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்களை 17-1-85ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

கேள்விப்பத்திரங்கள் 16-1-85ந் திகதி பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 750/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல்வேண்டும்,

பொதுமுகாமையாளர்
8-1-85
ஊர்காவற்றுறை. 1304


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் நுகர்ச்சி முகாமையாளர், வங்கிச் சேவைகள் முகாமையாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறிப்பிட்ட விண்ணப்பங்களை 31-1-85ந் திகதி வியாழக்கிழமைக்குப் பிந்தாமல், "பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை" என்னும் விலாசத்திற்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கலாம்.

### நுகர்ச்சி முகாமையாளர்:-

தகமைகள்: 1. கூட்டுறவுப் பணியாளரின் 11-வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12ம் சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/ க. பொ த. (உயர்தரம்) இல் 3 பாடங்களிலான சித்தியும், சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம், பொருட்களின் இறக்குமதி ஏற்றுமதி என்ற துறைகளில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

சம்பள அளவுத் திட்டம்:- 350 – 615

15 7 - 20 8

வயதெல்லை:- 25—40 வரை

### வங்கிச் சேவைகள் முகாமையாளர்:-

தகமைகள்:- 1. கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத் திட்டத்தில் கிராமிய வங்கி முகாமையாளர் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/ க. பொ. த. (உயர்தரம்) இல் 3 பாடங்களிலான சித்தியும், சம்பந்தப்பட்ட துறையிலான லிகிதர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

சம்பள அளவுத் திட்டம்:- 350 - 615

15 7 - 20 8

வயதெல்லை:- 25—40 வரை.

(1303)

## 1வது ஆண்டு நினைவஞ்சலி

செல்வி

சுதர்சினி

(வதனு)



மலர்வு 11-9-1973

உதிர்வு 14-1-1984

அன்பும் கபடமற்ற சிரிப்பும் பழலைப்பசசும [illegible]பு சேர் உள்ளமுங்கொண்ட எங்கள் இல்லத்து தியாகச் சுடர்மறைந்தாலும் என்றும் எம்முடன் இருந்து தெய்வமாக வழிகாட்ட வேண்டுகின்றோம்.

பப்பா, அம்மா, அன்புச் சகோதரர்கள்
164,2 மானிப்பாய் வீதி,
1299 யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் கிட்டிணபிள்ளை

(பருத்தித்துறை)

யாழ். பல்தொழில்நுட்ப நிறுவனத்தின் (கொக்குவில்) முன்னுள் அதிபரும், இளைப்பாறிய விரிவுரையாளருமான மயில்வாகனம் கிட்டிணபிள்ளை காலமானுர். இவர் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், திருமதி நாகம்மா இராசரத்தினத்தின் அன்புச்சகோதரரும், சந்திரன் (வட்டார அதிகாரி தேசியநீர் வழங்கல்வடிகால் அமைப்புச் சபை, கரவெட்டி), சற்குணன் (பொறியியலாளர் உர உற்பத்திக் கூட்டுத்தாபனம்), நாகராஜன் (தொழிற்சாலை முகாமையாளர் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை) ஆகியோரின் அன்புத்தகப்பனுரும், சந்திரா, பகவதி, தேவகி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னுரின் ஈமைக்கிரியைகள் இன்று ஞாயிறு காலை அன்னுரின் 90 அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று குடும்ப மயானத்தில் தகனம்செய்யப்படும். (1350)

### ஜி. ஸி. ஈ. பரீட்சை குழப்பம்:

# பரீட்சை ஆணையாளருக்கு

## யாழ். கல்வித்திணைக்களம் அறிக்கை

[கொழும்பு]

கடந்த டிசம்பர் மாதம் வடபகுதியில் குழப்பப்பட்ட கல்விப் பொதுத் தராதர (சாதரண) பரீட்சைகள் குறித்து யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்த அறிக்கை வடபகுதியில் குழப்பப்பட்ட ஜி. ஸி. ஈ. (சாதாரணதர) பரீட்சைகள் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள், குழப்பப்பட்ட பாடங்கள் ஆகியன பற்றியும் இவ்விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை பரீட்சைகள் ஆணையாளர், வட பகுதியில் கடந்த டிசம்பர் ஜி சீ. ஈ. பரீட்சையை மீண்டும் நடத்துவது பற்றி எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

போக்குவரத்துச் சீர்கேடு காரணமாகவும், குழப்பநிலை காரணமாகவும் யாழ்ப்பாணம், மூதூர் மாவட்டப்பாடசாலைகள் இம்மாதம் 15-ம் திகதியே முதலாம் தவணைக்காகத் திறக்கப்படும். (கி)

# ஆசிரியர் இடமாற்ற பட்டியல்

(கொழும்பு)

(நேற்றைய தொடர்ச்சி)

திருமதி ஏ. வள்ளிப்பிள்ளை நற்போர்ன் தமிழ் வித்தியாலயம் தியகம மேற்கு, திரு. எம். ராஜரத்தனம் தலவாக்கொல்லை தமிழ் வித்தியாலயம், திரு. வி. முருகையா ஹைலாண்ட்ஸ் தமிழ் மகா வித்தியாலயம் ஹட்டன், செல்வி ரி. கோதநாயகி, சென். ஜோன் ம. வி. ஹட்டன், திரு. எஸ். தில்லையம்பலம் வட்டக்கொட, தமிழ் வித்தியாலயம், திருமதி பி. தியாகராஜா, மொற்றிங்கம் த. வித்தியாலயம் அக்கரப்பத்தன, திரு. எம். இளையதம்பி கோல்புறாக் தமிழ் வித்தியாலயம் அக்கரப்பத்தன, திருமதி வி. இளையதம்பி கோல்புறாக் தமிழ் வித்தியாலயம் அக்கரப்பத்தன, திரு. எம். வேலாயுதம் கோல்புறாக் தமிழ்வித்தியாலயம் அக்கரப்பத்தன, திருமதி. கே. வேலாயுதம் கோப்புறாக் த. வித்தியாலயம் அக்கரப்பத்தன, திரு எஸ். யோகராசா கோல்புறாக் த. வித்தியாலயம் அக்கரப்பத்தன, திரு ஆர். தம்பிராத்தினம் சென் ஜோசப் த. வித்தியாலயம் மஸ்கெலியா, திரு கே. கேசவன் தமிழ் வித்தியாலயம் உடப்புசலாவை, திருமதி. ரி. பேரம்பலம் தமிழ் வித்தியாலயம் உடப்புசலாவை, திரு. கே. தர்மலிங்கம் அக்கரப்பத்தன த வித்தியாலயம், திருமதி. எல். சிவகுருநாதன் அக்கரப்பத்தன தமிழ் வித்தியாலயம், திருமதி. ஏ யோகராசா வற்றகொடை தமிழ் வித்தியாலயம்.

திரு. ரி. பாலசிங்கம் சரஸ்வதி மகா வித்தியாலயம் லின்டுல, திரு. ரி. கார்த்திகேசு கிளென்யம் தமிழ் வித்தியாலயம் அக்கரபத்தன, திருமதி கே. கார்த்திகேசு கிளென்யம் தமிழ் வித்தியாலயம் அக்கரபத்தன, திரு வி ஏ. சொர்ணலிங்கம் தலவாக்கொல்லை தமிழ் மகா வித்தியாலயம் தலவாக்கொல்லை, திரு ரி சொக்கலிங்கம் வத்தேகொட தமிழ் வித்தியாலயம் வத்தேகொட, திரு சிங்கராஜா திம்புல தமிழ் வித்தியாலயம் பத்தன, திருமதி கே சிங்கராஜா திம்புல தமிழ் வித்தியாலயம் பத்தன, திருமதி எம். விக்னேஸ்வர மத்தகெல்ல தமிழ் வித்தியாலயம தலவாக்கொல்லை, திரு எஸ். சிவப்பிரகாசம் தமிழ் வித்தியாலயம் ஹட்டன், திரு வி பரஞ்சோதி அக்கரபத்தன தமிழ் வித்தியாலயம் அக்கரபத்தன, செல்வி ரி. சரோஜா ஜோசெப் தமிழ் வித்தியாலயம் மஸ்கெலியா, செல்வி லலிதா சீவரத்தினம் ஜோசெப் தமிழ் வித்தியாலயம் மஸ்கெலியா, திருமதி எஸ். மார்க்கண்டு டல்லஸ் தமிழ் வித்தியாலயம் உடபுசல்லாவ, திருமதி ஏ. சபாரத்தினம் அம்கெட்ஸ்ற் தமிழ் வித்தியாலயம் உடபுசல்லாவ, திருமதி எஸ் ரகுநாதன் சூரியகபத்தன உடபுசல்லாவ. திரு. எஸ். சிறிபாலச்சந்திரன் சரஸ்வதி மகாவித்தியாலயம், லின்டுல, திரு எஸ் நாகமணி தமிழ் மகாவித்தியாலயம் கொட்டகல, ராஜேஸ்வரி சில்வநாயகம் தலவாக்கொல்லை மகாவித்தியாலயம் தலவாக்கொல்லை, திருமதி. தம்பிநாதன் தமிழ்வித்தியாலயம் நுவரெலியா, திருமதி மேர்வின் மகளிர் உயர்தர பாடசாலை கண்டி, திருமதி ஜே வி.டி செல்லையா தமிழ் மகாவித்தியாலயம் புசல்லாவ, திருமதி ஆர் பொன்னம்பலம் ஹன்ரன தமிழ் மகாவித்தியாலயம் கண்டி, திரு. ஆர். சின்னத்தம்பி கதிரேசன் கனிஷ்டவித்தியாலயம் நாலப்பிட்டிய, திருமதி இ கனகசபை அல்மனார் மகாவித்தியாலயம் கந்தப்பொல, திரு. எம். ஜெலோலிபவன் தமிழ் மகாவித்தியாலயம் புரஸ்ஸ, திரு. ரி. பரமேஸ்வரன் கதிரேசன் கனிஷ்ட மகா வித்தியாலயம் நவலப்பிட்டிய, திரு எம். விஷ்வந்தன் கதிரேசன் கனிஷ்ட மகா வித்தியாலயம் நாவலப்பிட்டிய, திருமதி. புவனேஸ்வரி கந்தையா கதிரேசன் கனிஷ்ட மகா வித்தியாலயம் நாவலப்பிட்டிய, திரு ரி கந்தசாமி தெல்தோட்ட தமிழ் வித்தியாலயம் ஹேவா ஹெட்ட, திரு. எம். செல்வராஜா சாகிரா கல்லூரி கம்பளை, திரு. எஸ். சின்னத்துரை தலத்தோயா, செல்வி பி. கணபதிப்பிள்ளை பண்டாரவளை, செல்வி. என். இரத்னசபாபதி லுன்கல, திருமதி. பி தம்பிஐயா தமிழ் வித்தியாலயம் உடபுசல்லாவ, திரு. எஸ். கதிரவேலு திக்வெல தமிழ் வித்தியாலயம் ஹலிஎல, திருமதி பி கதிரவேலு திக்வெல தமிழ் வித்தியாலயம் ஹலிஎல, திரு. ஐ வேலாயுதன தமிழ்வித்தியாலயம் பண்டாரவளை, திருமதி கே. வேலாயுதன் ஹொப்டன் தமிழ் வித்தியாலயம் ஹொப்டன், திருமதி வி. டுவைற் தமிழ் மகாவித்தியாலயம் பண்டாரவளை, திருமதி குணமணி சிவஞானம் பதுளை.

[தொடரும்]

## அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் இடம்பெற்ற இராணுவத்தினரின் தாக்குதல் சம்பவத்தின்போது பலியானவர்களில் மூவரின் சடலங்களில், அடையாளம் காணப்பட்ட பத்தமேனியைச் சேர்ந்த வ ஆறுமுகம் (56-வயது) என்பவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர்நேற்றுமுன்தினம் நண்பகல் உறவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மற்றும் இருநபர்களின் சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

றீகல் மினி
தினசரி 10-15, 1-15 மட்டும்.
கமலஹாசன்-ஸ்ரீபிரியா நடிக்கும்
எனக்குள் ஒருவன்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15,
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

யாழ் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!

[1] பேர்லின், பரீஸ், கொலண்ட் செல்ல விரும்புவோர் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

[2] கூடிய விரைவில் குறைந்த கட்டணத்தில் உங்கள் ஆசனங்களை பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும்.

[3] யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா செல்லும் வரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து சகல வசதிகளையும் செய்து தருவார்,

QUICKS
ENTERPRISES
TRAVELS and TOURS
533, Stanley Road
JAFFNA
BRANCH:
Saraswathy Gardens
Church Road
Chavakachcheri
T,phone: 273

## கிராமசேவை அலுவலர்கைது

(திருகோணமலை)

மூதூர்த் தொகுதியில் உள்ள பூநகர் பகுதியில் கிராமசேவை அலுவரை ஆயுதப்படையினர் கடந்த திங்கட்கிழமை கைது செய்து தீவிர விசாரணைக்காகத் திருகோணமலை கடற்படை முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

சிவராசா என்ற பெயருடைய இக்கிராம சேவை அலுவலர் தனது சைக்கிளில் ஒரு தமிழ் இளைஞரை ஏற்றிச் சென்றதாகத் தெஹிவத்தையிலுள்ள விழிப்புக் குழுவினர் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே ஆயுதப்படையினரால் அவர் கைது செய்யப்பட்டாராம்.

# 'நடலை இல்லோம்'

நத்தார், புதுவருடம், நாளைய தினம் பொங்கல். அடுத்தடுத்துவரும் இப்பெருவிழாக்கள் இந் நாட்டில் வாழையடி வாழையாக வாழும் தமிழ் மக்களுக்கு இன்பம் அளிக்கின்றனவா? இதுவே நாளை நாம் ஊன்றிச் சிந்திக்கவேண்டியது.

கிரீடம் சூடும் தலையில்தான் கவலை குடிகொண்டிருக்கின்றது என்று ஷேக்ஸ்பியர் விளக்குகிறுர். இது முடி ஆட்சியின் அனுபவம்; இன்று எங்கும் மக்கள் ஆட்சி என்ற பெயர் அது மக்களுக்கே துன்பத்தை வாரி வழங்குகின்றது.

பெருஞ்செல்வர்களே பெருங்கவலையாளர்கள் என்ற தத்துவம் இன்றும் பேசப்படுகிறது. மக்கள் ஆட்சியில் ஏழைகள் இன்புற்றிருக்கிறுர்களா?

கல்வியல் தேர்ந்த அறிஞர் பலர் வாழத்தெரியாதவர்களாய்க் கலங்குவதை இன்றும் காணலாம்; அதற்காக படிக்க வசதியற்று, கல்வி குழம்பியிருக்கும் நிலைகண்டு தேற்றம் அடையலாமா?

மக்கள் ஆட்சியை மாக்கள் ஆட்சியாக மாற்றி விடுவதற்கு ஜனநாயக அமைப்பில் பல உபாயங்கள் உள. அவ்வித மாற்றம் கைகூடுமாயின் அந்த ஆட்சியில்நடக்கும் அக்கிரமங்கள் அதிசயங்களா?

தொழில்நுட்ப யுகத்தில் இயற்கையின் கோளாறு முற்றிலும் கட்டுப்படுமா? 21வது நூற்றாண்டில் இது முடியுமாவென்று எங்களிற் பலர் பார்க்கும் பாக்கியம் இல்லை.

தொழில்நுட்பம் என்ற பெயரில் ஆயிரத்துச் சொச்சம் மக்கள் சில நிமிடங்களில் மாண்டதும், இன்னம் ஆயிரக்கணக்கில் ஊனமுற்றதும் போபாலில் இன்று நடந்தேறிய அற்புதம்.


மக்கள் ஆட்சி என்ற பெயரில் உலகின் சிறந்த தலைவர் கடமைச்கு செல்லும் வழியில் கொல்லப்பட்டதும் கடந்த ஆண்டின் உலகசாதனை.

'விண்ணில் ஆண்டவன் இருக்கிருன்; மண்ணில் எல்லாம் நன்ருயிருக்கிறது' என்றுபாடினுர் அங்கிலப்புலவர் ரொபர்ட் பிறவுணிங் இன்று இதனை ஏற்கலாமா? இல்லவே இல்லை. மண்ணில் நிலை குலைந்திருக்கிறது; புலவரே மன்னிக்கவும்: ஆண்டவன் விண்ணில்ருந்து மண்ணுக்கு வரத் தயங்குகின்ருன்.

ஆனுல் வந்தே தீரவேண்டுமென்ற நம்பிக்கை நிட்சயம் உண்டு.

யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை
தைப்பொங்கலின் பின் கல்லூரி
15-1-85 அன்று ஆரம்பமாகும்.
1984ம்-ஆம் ஆண்டுக்கான தரம் 12 பரீட்சைகள் 16-1-85 அன்று ஆரம்பமாகும். Lond O.L, A L, தவணைப் பரீட்சைகளும் அதேநாள் ஆரம்பமாகும்.
(1332) அதிபர்

Computer Programming
AND
Data Processing Course
(BASIC LANGUAGE)
9 ஆவது பிரிவு
வார இறுதி வகுப்புகள்
ஆரம்பம்: 19-01-85
காலை 9-00 மணி
கட்டணம்: ரூபா 1500/-
வெளிநாடு செல்பவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
CANTABIA INSTITUTE
21, Main Street, JAFFNA.
T' Phone 24201



கரம்பொன்னில் வெறியர்களின் கொடூரக்கொலைக்குள்ளான தாயும், திருமணமாகாத மகளும், சூசைப்பிள்ளை செல்லம்மா, நோபிள் சூசைப்பிள்ளை ஆகிய இந்த இருவரைக் கொலைசெய்து, இவர்கள் வீட்டில் கொள்ளை நடத்தியதாகக் கூறப்படும் நால்வருக்கு ஈ. பி. ஆர். எல். எவ். என்ற இயக்கம் மரணதண்டனை விதித்துள்ளது. —படம்:குமார்.

## முல்லைத்தீவு அகதிகளுக்கு நிவாரண உதவி கோரப்படுகிறது!

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிகளாயிருக்கும் 'பத்தாயிரத்துக்கு மேற்பட்டோருக்கும், வடக்கு - கிழக்குக் கரையோரப் பகுதிகளில் தொழில் செய்ய முடியாதிருப்போருக்கும் வழங்குவதற்கான நிவாரண உதவிகோரி 'அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்' பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உணவு, உடை, மருந்து வகை, குழந்தைகளுக்கான பால்மா ஆகின மேற்குறிப்பிட்ட பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக வழங்கவேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கருணை உள்ளம் படைத்தவர்களும், பரோபகார சிந்தை உள்ளவர்களும் இத்துன்பம் துடைக்கும் பணிக்கு உதவுமாறு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அவ்வேண்டுகோளில் கேட்டக்கொண்டிருக்கிறது.

பணமாகக் கொடுப்பவர்கள் ''அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (வரையறுக்கப்பட்டது), 66 சப்பல் வீதி, யாழ்ப்பாணம்'' என்னும் முகவரியில் வழங்குமாறும், காசோலையை அனுப்பி வைப்பவர்கள், ''T R R.O. Ltd'' என்று குறிப்பிட்டு அனுப்பும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விரைவில் ரயில் யாழ். வரும்

[யாழ்ப்பாணம்]

கொழும்புக்கும் கிளிநொச்சிக்குமிடையே சேவையிலீடுபட்டுவந்த ரயில் சேவை பளை வரையும் நீடிக்கப்பட்டுள்ளது

முகமாலையில் இடம்பெற்ற ரயில்பாதை குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்ட பாதை சீரமைக்கப்பட்டதும் கொழும்பு-யாழ்ப்பாணம்ரயில் சேவை நடைபெறும் என்றும் அடுத்த வாரம் தொடக்கம் இச்சேவை நடைபெறலாம் என்றும் புகையிரத நிலைய உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## நீதிமன்றத்தில் கொள்ளை!

[மாவிட்டபுரம்]

மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தட்டச்சு இயந்திரங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்திலும் சில பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுளளது.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் நேற்று அதிகாலை சில பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தொழில் நீதிமன்றம் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பதிவு ஏடுகள் பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## காலமானுர்

(சென்னை)

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடுசட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சண்முகம் (56-வயது) நேற்றுக் காலமானுர்.

## முல்லைத்தீவு அகதிகளுக்கு காவலூர் பிரஜைகள் உதவி!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் பட்டினிச் சாவை எதிர்நோக்கியிருக்கும் அகதிகளுக்கு உதவ ஊர்காவற்றுறை பிரஜைகள் குழு நடவடிக்கை எடுத்துவருகிறது

முல்லைத்தீவில் அகதிகளாகியுள்ள மக்களின் நிலையை எடுத்துக்கூறி ஊர்காவற்றுறை பகுதி மக்களிடம் உதவிப் பொருட்களை சேகரிப்பதில் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

அல்லலுறும் மக்களுக்கு உதவ தாராளமாக உதவுமாறு குழுவினர் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## தந்தையும்மகனும் துப்பாக்கி வேட்டுக்குப் பலி!

[வவனியா]

நள்ளிரவில்துப்பாக்கிவெடிச் சத்தம்கேட்டுவெளியில்சென்று பார்த்த தந்தையும் மகனும துப்பாக்கிவேட்டுக்குப் பலியானுர்கள்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு பரிதாபகரமான இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

வவனியா-மணியன் குளம் என்னுமிடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (56-வயது) என்பவரும் அவரது மகன்கிருஷ்ணகுமார்(23வயது) என்பவருமே துப்பாக்கி வேட்டுக்குப்பலியானவர்களாவர்.

மரணமான கணபதிப்பிள்ளை சிறந்த சமூக சேவையாளர் என்றும் முன்னுள்கிராமசபைத் தலைவராக இருந்து அக்கிராமத்துக்குச் சிறந்த சேவையாற்றியிருந்தவர் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## பூஸா பில்..

[1ம்பக்க 5ம் கலத்தொடாச்சி]

செய்யப்படுவார்கள் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி உறுதியளித்துள்ளதாக யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்

தைப்பொங்கலுக்குப் பின்னர் ஒரிரு தினங்களில் இவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று தம்மிடம் அவர் உறுதியளித்துள்ளதாக திரு. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### முத்தையா அழகம்மா

முத்தையா அழகம்மா காலமானுர். இவர் காலஞ்சென்ற வ. முத்தையா [மலேயன் பென்சனியர்] அவர்களின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, மகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயரும், சிவசுப்பிரமணியம், சோதிநாகரத்தினம், இளைப்பாறிய உப்புக்கூட்டுத்தாபன முகாமையாளர் காலஞ்சென்ற சின்னத்துரை இளைப்பாறிய கட்டிடத் திணைக்கள அதிபர், ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார், ஈமக்கிரியைகள் ஏழாலையில் அன்னுரின் இல்லத்தில் 13-1-85 ஞாயிற்றுக்கிழமை மாலை இரண்டு மணியளவில் நடைபெறும், உற்றுரும் உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

1363

அறிவிப்பாளர்
ச. சிவசுப்பிரமணியம்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.

## இலங்கை...

(1 ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

னர்.

கடந்த 10ம் திகதி இந்திய கடல் எல்லையினுள் ஒரு இந்திய மீனவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதும், கடந்த 7ம் திகதிஇரவுஇரண்டுமீனவர்களை அதே கடற் பகுதியில் வைத்து சுட்டுக் கொலை செய்ததும், இந்தக் கடற்படைப் படகாக இருக்கக்கூடுமென்று சந்தேகம் கொண்டுள்ள தமிழ்நாடு உயர் பொலிஸ் அதிகாரிகள் இவர்களை விசாரணை செய்தார்கள். ஆயினும் இவர்களது விசாரணை பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

உயிருக்கு அபாயம் விளைவிக்கும் ஆயுதங்களைக்கொண்டு கலகம்செய்தமை, பொது ஊழியர்களை கடமைசெய்ய விடாது காயப்படுத்தியமை போன்ற பல பாரிய குற்றச்சாட்டுக்கள் மீதும் பாஸ்போர்ட் விதிகளை மீறிய குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் இவர்கள் இந்திய குற்றச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட இலங்கை அதிவேகரோந்துப்படகுபலத்த பாதுகாப்புக்களுடன் மண்டபத்தில்நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த படகு நேற்றுமுன்தினம் இந்திய கடற்பிராந்தியத்தில் ஊடுருவி இந்திய மீனவர்களை தாக்கியபோது இந்திய கடலோர காவல் படையினரால் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே. (சூ)

## ராணுவ ரீதி...

1-ம்பக்க3ம்கலத் தொடர்ச்சி)

தியபோதிலும் அவை தோல்வியிலேயே முடிந்துள்ளன. எனவே பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் இனிப் பயனில்லை. இந்திய அரசுதான் எங்களுக்கு உதவவேண்டும்'' என்று கூட்டணி குழு திரு. பார்த்தசாரதியைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது

கூட்டணிக் குழுவினர் இன்று பிரதமர் திரு. ரஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## தந்திக் கம்ப....

(1ம்பக்க 2ம்கலத் தொடர்ச்சி]

காட்டிக்கொடுத்தமை கண்டு பிடிக்கப்பட்டு விசாரணையின் பின்னர் மரண தண்டனைவழங்கப்பட்டது'' — ''ரெலியும்-கொமாண்டோவும்'' என்று வாசகங்கள் காணப்பட்டன. இவ்வட்டையை சில மணித்தியாலங்களின் பின்னர் இராணுவத்தினர் எடுத்துச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புங்கங்குளத்தைச் சேர்ந்த மாமி என்றழைக்கப்படும் விக்னேஸ்வரி என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது

இவரது சடலம் விசாரணைக்காக உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. [மா]

## 4 மாதங்களில்..

1-ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி]

கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அதேபோன்ற இரு முகாம்கள் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டு அவற்றிலும் தமிழர்கள் பலர் கைதிகளாக்கப்பட்டுள்ளனர்.

''முல்லைத்தீவிலுள்ள ஏழு கிராமங்களிலிருந்து 20 ஆயிரத்துக்குமதிகமான மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர் தற்போது இங்குள்ள மக்கள் அங்குள்ள பாடசாலைகள், தேவாலயங்கள் மற்றும் பொதுஇடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்'' என்றுர்.

திரு சிவசிதம்பரம், திரு. அமிர்தலிங்கம், திரு. ஆர். சம்பந்தன் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது இக்குழு இந்திய வெளிநாட்டுக் கொள்கை அமைப்புத் தலைவர் திரு ஜி பார்த்தசாரதியையும், வேறு முக்கியஸ்தர்களையும் சந்திக்கவிருக்கிறது. (கி)

## இவர்களுக்கு...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

அலுவலகத்தில் தம்மைச் சந்திக்குமாறு கல்விச் சேவைக் குழு உறுப்பினரான சட்டத்தரணி க. ஜெயக்குமார் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் கிடைத்தும் வரமுடியாதவர்களில் 8 பேர் தன்னுடன் தொடர்புகொண்டதாகவும், கீழ்க்காணும் இந்த எட்டுப் பேரும் 21ம் திகதி தன்னைச் சந்திக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

திருமதி எலிசபேத் ஜெயசோதி (முல்லைத்தீவு), திருமதி ஏ. மகேஸ்வரி (இணுவில்), செல்வி ஏ.சௌதா (புலோலி), செல்வி ஏ. மங்களேஸ்வரி (வல்வெட்டித்துறை) செல்வி எஸ். நிறைஞ்சலா (மானிப்பாய்), எஸ் உதயகுமார் (கரவெட்டி), செல்வி அனுஷா சின்னத்துரை (மானிப்பாய்), செல்வி ஏ சியாமளா (உரும்பராய்).

இதுவரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் நியமனம் வழங்கப்படுமென்றும் திரு. ஜெயக்குமார் கூறினுர்.

## தனது திட்டப்....

(1ம் பக்க 2ம்கலத் தொடர்ச்சி)

தீர்வை அங்குள்ள தமிழ்மக்களும் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையேஏற்பட்டுள்ளது என்று இலங்கை கிராமியத் தொழிற்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''இலங்கை அரசு இப்பிரச்னையை தீர்க்க விரும்புகிறது. ஆனுல் தற்போதைய சூழ்நிலைகள் பேச்சுவார்த்தைக்கு உகந்ததாக இல்லை. எனவே பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான காலம் வரும்வரை தமிழ் மக்கள் பொறுத்துத்தான் இருக்க வேண்டும்''

''வடக்கு கிழக்கில் தமிழ் தீவிரவாதிகளின் செயல்களை ஆதரிக்கமுடியாது''.

சர்வகட்சிமாநாடு தமிழர் பிரச்னையைத் தீர்க்கத்தவறிவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஜனதிபதி...

[1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி]

பந்தோபஸ்து சபை ஒன்றை ஜனதிபதி அமைத்துள்ளார்.

ஜனதிபதியைத் தலைவராகக் கொண்டு இயங்கவுள்ள இந்த விசேட சபையில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி. சேபால ஆட்டிக்கல, திரு. ஐ சிறிவர்த்தன மற்றும் முப்படைத் தளபதிகள் அங்கம் வகிப்பார்கள்.

தேசிய பாதுகாப்புச் சபை போலல்லாமல் இந்தச்சபை பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை மட்டுமே கையாளவிருக்கிறது.

## வணபிதா பஸ்தியான் தாயார்...

(1ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி]

லத்தை நியூயோர்க் எடுத்துவர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

இந்தக்கடிதத்தை அமெரிக்காவிலுள்ள ஈழம் சங்கத்தலைவர் திரு. எஸ். தில்லையம்பலம் உதவிஅமைச்சரிடம் நேரில் கையளித்தார்,